# சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

## தமிழ்நாடு - புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான கால அவகாசம் நீட்டிப்பு

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் தமிழ்நாடு -புதுச்சேரி மாநில சட்டப் பேரவை பொதுத்தேர்தலுக்கு கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் 20-2-2026 முதல் 2-3-2026 வரை தலைமைக் கழகத்தில் விண்ணப்பித்திட வேண்டுமென ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து,

கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான 1.3.2026 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மேல் விண்ணப்பம் பெறப்படும்.

மேலும் கழகத் தலைவர் அவர்களிடம் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் வேண்டுகோள் வைத்ததற்கிணங்க, **6-3-2026, வெள்ளிக்கிழமை, மாலை 5.00 மணி** வரையில் கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

தமிழ்நாடு - புதுச்சேரி மாநில சட்டப்பேரவை தொகுதிக்கான விண்ணப்பக் கட்டணம் :

| | |
|---|---|
| **பொதுத் தொகுதி** | **ரூ.25,000/-** |
| **மகளிர்க்கும் மற்றும் தனித் தொகுதிக்கும்** | **ரூ.15,000/-** |

குறிப்பு : விண்ணப்பபடிவம் தலைமைக் கழகத்தில் ரூ..1,000/- வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டும்! எளிமைச் செம்மல்

# நல்லக்கண்ணுவின் வெற்றிடத்தைக் காலத்தாலும் நிரப்ப இயலாது!

## விடுதலைச் சிறுத்தை கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் அறிக்கை!

**சென்னை, மார்ச்.2 - எளிமை செம்மல் 'ஆர் என்கே' அவர்களின் மறைவால் உருவாகியுள்ள வெற்றிடத்தைக் காலத்தாலும் இட்டுநிரப்ப இயலாது! என்றும் இந்திய ஒன்றிய அரசு அவருக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்! என்றும் வி.சி.க. தலைவர் தொல் திருமாவளவன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**



இதுகுறித்து அவரது இரங்கல் செய்தி வருமாறு:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும் இந்திய விடுதலைப் போராட்ட வீரருமான தகைசால் தமிழர் அய்யா ஆர்.என்.கே அவர்களின் மறைவு மிகுந்த துயரமளிக்கிறது.

அவர் நூறாண்டுகள் வாழ்ந்து நிறைவாழ்வை அடைந்தவர் என்றாலும், அவரது மறைவு நெஞ்சைக் கனக்கச் செய்கிறது.

மாபெரும் கொள்கை குன்றம் சரிந்தது!

மகத்தான எளிமையின் சிகரம் சாய்ந்தது! அரசியல் தூய்மையின் பேரொளி மறைந்தது! பாட்டாளிகளின் உற்றத் தோழரின் மறைவு எவராலும் ஈடுசெய்ய முடி யாதது! உழைக்கும் மக்களின் பாதுகாப்புப் பேரரணாக வாழ்ந்து மறைந்த மாமனிதர் தோழர் நல்லக்கண்ணு அவர்களுக்கு எமது செம்மாந்த வீரவணக்கம்!

அவருடைய வயதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வயதும் ஒன்றே என்பது அவருக்கு வாய்த்த தன்னியல்பாக அமைந்த ஒரு மகத்தீன பெருமையாகும். அவர் இந்திய விடுதலை போராட்டத்தில் பள்ளிப் பருவத்திலேயே பங்கேற்று சிறைபட்டு ஈகம் புரிந்தவர். ஆங்கிலேய வல்லாதிக்க ஆட்சியாளர்கள் அவருக்குச் சொல்லொணா கொடுமைகளை இழைத்தனர். மிடுக்கான தோற்றம் கொண்ட அவரது மீசையைத் தீயால் சுட்டுப் பொசுக்கிய கொடூரத்தையும் அரங்கேற்றினர். அதிலிருந்து அவர் மீசை வைப்பதைக் கைவிட்டார் என்பது நம் கண்ணீரை உகுக்க செய்யும் குரூரமான வரலாறாகும்.

இந்தியப் பொதுவுடைமை கட்சியில் இணைந்து களமாடிய அவர்மீது "நெல்லை சதி வழக்குப்" புனை யப்பட்டது. அதனையொட்டி சிறைப்படுத்தப்பட்ட அவர் சந்தித்த அடக்குமுறைகள் ஏராளம். சாதி, மதம் கடந்து உழைக்கும் மக்களை அமைப்பாக்கி அவர்களை அரசியல்படுத்தி வர்க்க விடு தலைக்கான புரட்சியை முன்னெடுக்க வேண்டுமென்பதில் தீவிரம் காட்டியவர்.

எளிமையான பொது வாழ்வு; வலிமையான போர்க்குணம்; உறுதியான கொள்கை பிடிப்பு; பக்குவமான அணுகுமுறை போன்றவையே அவரது அடையாளங்கள் ஆகும்.

விடுதலைச் சிறுத்தைகளின் மீது பேரன்பைப் பொழிந்தவர். எப்போதும் என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தியவர். சிறுத்தைகளின் "அம்பேத்கர் சுடர்" விருதினைப் பெற்றுக் கொண்டு எமக்குப் பெருமை சேர்த்தவர்.

"தகைசால் தமிழர்" என தமிழ்நாடு அரசால் முதலமைச்சர் அவர்களால் பாராட்டப்பெற்ற பெருந்தகை ஆவார்.

பொதுவாழ்வில், குறிப்பாக தேர்தல் அரசியல் களத்தில் இத்தகைய 'தூய்மைமிகு பேராளுமை' இனி எப்போது வாய்க்கும் என்னும் ஏக்கமே மிஞ்சுகிறது. எளிமை செம்மல் அய்யா நல்லக்கண்ணு அவர்களின் மறைவால் அரசியல் களத்தில் உருவாகியுள்ள வெற்றிடத்தைக் காலத்தாலும் இட்டு நிரப்ப இயலாது.

அவரது திருவுடல் அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பெரும் ஆறுதல் அளிக்கிறது. இச்சூழலில் தமிழ்நாடு அரசுக்கும் முதலமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய ஒன்றிய அரசு அவரது ஈகம் நிறைந்த பொதுவாழ்வையும்; தேசத்தின் விடுதலைக்கான அறப்போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பையும் போற்றும் வகையில் அவருக்கு தேசத்தின் உயரிய விருதான 'பாரத ரத்னா' விருதினை வழங்கிச் சிறப்பிக்க வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

முதுபெரும் தலைவர் தோழர் ஆர்என்கே அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர் உள்ளிட்ட உற்றார் உறவினர்களுக்கும் பொதுவுடைமை இயக்கத் தோழர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# மீண்டும் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்க உறுதிமொழி ஏற்போம்!

## தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத் தலைவர் வா.ரங்கநாதன் அறிக்கை!

சென்னை, மார்ச் 2-

தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத் தலைவர் வா.ரங்கநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சமூகநீதிச் சுடரொளி மக்கள் மனங்களில் மாண்புடைத் தலைவராக உயர்ந்து நிற்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு 73 வது பிறந்து நாள் மார்ச் 1- அனைத்து சாதியினரும் அர்ச்சராகலாம் திட்டத்தில் பாலின வேறுபாட்டைத் தகர்த்து, ஈராயிரம் ஆண்டுகளாக கருவறை இருள் ஒரு மயில்கள் அகற்றியவர் ஆரியத்திற்கு எதிராக தொடர் போர் செய்கிறார்

இந்தியா காணாத மாபெரும் சமூகப் புரட்சியை நிகழ்த்திய சமூகநீதிச் சுடரொளி மக்கள் மனங்களில் மாண்புடைத் தலைவராக உயர்ந்து நிற்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் பல்லாண்டு வாழ்க,,!

இந்துகளின் கட்சி என உரிமை கொண்டாடும் பாஜகவினர், . 'இந்து விரோத கட்சி' என்று குற்றம் சாட்டப்பட்ட திமு கழக அரசு இந்து மடத்தையும் காக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இது ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம் என்பது போன்றது.

இந்து ஆன்மீக நம்பிக்கையை மூலதனம் ஆக்கி, அதிகாரத்தைப் பிடித்த பாஜக இந்நாட்டின் பெரும்பான்மையான மக்களின் வாழ்வு ஆதாரத்தை அழித்தது. ஆனால், மக்களுக்கு சமத்துவ உணர்வும் சுயமரியாதை உணர்வும் ஊட்டி, மக்கள் வாழ்வில் மட்டுமில்லாமல் - தெய்வத் திருக்கோவில்களிலும் சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநாட்டியுள்ளார் - திராவிடர் ஆட்சி நடத்தும் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

1967ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் தமிழர்களின் தன்மான ஆட்சிப் பயணம் தொடங்கியது. அப்பயணத்தை அண்ணாவிற்குப் பிறகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் முன்னெடுத்தார். கலைஞருக்கு பின்பு, தளபதி ஸ்டாலின் வழியில் அப்பயணம் தொடர்கிறது.

திராவிடத் தமிழர் தன்மான ஆட்சியின் மிக முக்கியமான சமூக நீதித் திட்டம் ஆலயங்களில் அனைவரும் சமம் என்பதை நடைமுறைப்படுத்துவது. இதற்கான சட்டத்தை 1972ஆம் ஆண்டு கலைஞர் கொண்டுவந்தார். அப்போது சில வஞ்சகக் கூட்டத்தார், நீதிமன்றம் படியேறி நீதி என்ற பெயரில் அநீதியாக சதி செய்து தடுத்தனர். 2006 ஆம் ஆண்டு அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் 2007 - 2008 ஆம் ஆண்டு பயிற்சி பள்ளியில் படித்து முடித்து 2009 ஆம் ஆண்டு பயிற்சி பெற்ற அர்ச்சகர் மாணவர்கள் தாயற்ற பிள்ளைகள் போல நின்றபோது, தாயுமானவராக அரவணைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவரின் வழியில் தளபதியும் கருவறையின் சாதி பேதத்தையும், பாலின பேதத்தையும் ஒழித்து, சமத்துவ ஆன்மீகத்தைக் கட்டி எழுப்பப் போராடி வருகின்றார். அவர் பக்கம் நாங்கள் நிற்கின்றோம்.

ஆகஸ்ட் 14, 2021 ஆம் ஆண்டு அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தில் 29 பார்ப்பனர்கள் அல்லாத அர்ச்சகர் மாணவர்களை பணி நியமனம் செய்து முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கினார்.

ஈராயிரம் ஆண்டுகளாக கருவறை இருள் ஒரு மயில்கள் அகற்றியவர் முதலமைச்சர் உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்தில் நூற்றுக்கணக்கான வழக்குகளை தொடர்ச்சியாக ஆரியர்கள் பிஜேபி ஆர் எஸ் எஸ் பார்ப்பனர்கள் போன்ற தொடர்ச்சியான வழக்குகள் போட்டு வருகிறார்கள் இது எதிர்த்து தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் உறுதியாக நின்று அர்ச்சகர் மாணவர்களுக்காக ஆதரவாக நின்று போராடி வருகிறார்.

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் கீழ் பயின்ற மாணவர்கள் மூலம் இந்தத் திட்டம் நிறைவேறக்கூடாது என்பதற்காக, பிஜேபி, ஆர்.எஸ்.எஸ், விஷ்வ இந்து பரிஷத் போன்ற இந்து அமைப்புகள், பயிற்சி பெற்ற மாணவர்களுக்கும், அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்திற்கும், கொலை மிரட்டல்கள் விடுத்தும், அச்சுறுத்தியும், சமூக வலைத்தளங்களில் அவதூறுகள் பரப்பியும் வருகின்றன. உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தவுடன் அர்ச்சகர் பயிற்சி பள்ளி உடனே திறக்க வேண்டும் என்று அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் சார்பாக கோரிக்கை வைத்தும் அந்த கோரிக்கை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றினார்.

தமிழ்நாட்டில் 2007 - 2008 ஆம் ஆண்டு 207 மாணவர்கள் பயிற்சி முடித்துள்ளார்கள் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் 2022 - 2023 ஆம் ஆண்டு இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இட ஒதுக்கீடு அடிப்படையில் 44 பேர் தேர்வு பெற்றனர்.

இச்சூழலில் மீண்டும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உயிர் கொடுக்கப்பட்டு 94 பேர், குறிப்பாக மூன்று மாணவிகள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டு ஓராண்டு அர்ச்சகர் படிப்பை, முடித்து சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். தற்போது நடப்பு கல்வியாண்டு 2023 - 2024 ஆம் ஆண்டில் 111 மாணவர்கள் 2024 2025 ஆம் ஆண்டில் 96 மாணவர்கள் 2025 2026 ஆம் ஆண்டில் 100 அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் பயின்று வருகின்றனர்.

பல்சர் பேச்சில் பெண்களும் ஏராளமானவர்கள் முடித்துள்ளார்கள்.

அதில் பாலின சமத்துவத்தோடு அர்ச்சகர் பயிற்சி பள்ளி நடக்க வேண்டும் என்று கூறி இருந்தோம் அதில் இரண்டு ஆண்டுகளாக அர்ச்சகர் பயிற்சி பள்ளி நடந்து முடிந்துள்ளன அதில் பெண்களும் அர்ச்சகர் ஆவதற்கு படித்து முடித்துள்ளார்கள் தற்போது ஆண்டிலும் 19 மாணவர்கள் பெண்கள் படித்து முடித்து விட்டார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலைத்துறை ஒரு சிறப்பான செயல்பாட்டை செய்து வருகிறது. கரு சுமக்கும் பெண்கள் கருவறைக்குள் என்ற முழக்கத்தை முன்வைத்தார் முதலமைச்சர் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலைத்துறை பல குடமுழுக்குகளும் அரிய வகையான ஆன்மீக சம்பந்தமான நூற்றுக்கணக்கான நூல்களையும் ஆய்வு செய்து அதை புத்தகமாகவும் வெளியிட்டு மிஷன் அல்லது துறை சார்பாக இலவச திருமணங்கள் பழமையான கோயில் கண்டறிந்து அதை திருப்பணி செய்வது கோயிலில் உள்ள ஓவியங்கள் சிற்பங்கள் கோயில் உடைய கலாச்சாரங்களும் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்பான வழிகாட்டுதலும் சிறப்பான செயல்பாடுகளும் செய்து வருகிறார்

இந்த பிறந்தநாளில் ஆரியத்திற்கு எதிராக சனாதன மனுதர்மத்திற்கு எதிரான தொடர் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் அதில் தமிழகத்தில் உள்ள பெரிய கோயில் ஆகம கோவில்களில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் திருக்கோயில் சென்னை பார்த்தசாரதி திருக்கோயில் போன்ற கோயில்களில் மாணவர்களை அர்ச்சகர் பணிக்கு கருவறையில் சமத்துவமாக அர்ச்சகராகவும் ஓதுவராகவும் பணியாற்ற நீங்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். என்று அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கம் சார்பாக உங்களிடம் கோரிக்கை முன்வைக்கிறோம்.

தங்களின் 73ஆம் பிறந்த நாளில் " மீண்டும் திராவிட மாடல் அரசு ஆட்சி பொறுப்பு ஏற்க வேண்டும்" என உறுதிமொழி ஏற்றுக்கொள்வோம்..

பாசிசத்தை வீழ்த்த, மதவெறி அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க, பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தும் ஜனநாயகக் போர்க்களம் காண்பது, நம் ஒவ்வொருவரின் மாபெரும் ஜனநாயகக் கடமை. இப்போர்களத்தில் கண்ணனாக நின்று, மு.க. ஸ்டாலின் அவர்கள் எல்லோரையும் வழிநடத்திச் செல்கிறார். இது தமிழகத்திற்கே பெருமை சேர்ப்பது ஆகும்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்" என்கிற நற்சிந்தையுடையோர் ஒவ்வொருவரின் ஆன்மிக உள்ளத்தோடு, நம்முடைய முதலமைச்சர் "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்" வாழவேண்டும் என்று திருச்செவ்வடிகளை நினைந்து இறைஞ்சுகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## செஞ்சியில் 5000 பேருக்கு நல உதவிகள் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி. மார்ச். 2-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சி மத்திய ஒன்றியம் மழவந்தாங்கல், கெங்கவரம் ஆகிய ஊராட்சியில் அரிசி உள்ளிட்ட நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குசெஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

கெங்கவரம்ஊராட்சி மன்ற தலைவர்மகேஸ்வரி பொற்செழியன்,ஒன்றிய கவுன்சிலர் சத்தியா கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ கலந்துகொண்டு சிறப்புரையாற்றி மழவந்தாங்கல், கெங்கவரம்ஆகிய ஊராட்சிகளில் உள்ள 5000 நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில்செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன் மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய நிர்வாகிக ள் வாசு, திருநாவுக்கரசு, அய்யாதுரை, ஊராட்சி நிர்வாகிகள் மழவந்தாங்கல்திருமாவளவன் அண்ணாதுரை முருகன், காண்டிபன், செல்வம், அய்யாக்கண்ணு, சிங்கார வேல், கதிர்வேல் கெங்கவரம்முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்ச்செல்வி தங்கதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் குமார், சக்தி வேல், நிர்வாகிகள் கணேசன், சங்கர், ரமேஷ் ,சரவணன், அய்யப்பன், லட்சுமணன், டி.கணேசன், இளைஞர் அணி அன்பு தொண்டரணி மோகன் பெரியார்,உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முயற்சியால்

# 'திராவிட மாடல்' ஆட்சியில் தொழில் துறையில் சாதிக்கும் பெண்கள்!

## வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை!

சென்னை, மார்ச் 2-

கழக மகளிரணியினர் முன்னெடுத்து வரும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடான பரப்புரையானது மகளிரிடையே பெருத்த வரவேற்பை பெற்று வருகிறது.

வீடு வீடாக சென்று பெண்களை சந்திக்கும் ஸ்டாலினின் மகளிர் படை உறுப்பினர்கள் கழகத்தின் சாதனை திட்டங்களையும் அதனால் பெண்கள் அடைந்து வரும் முன்னேற்றத்தையும் எடுத்துக் கூறி ஆதரவு திரட்டி வருகின்றனர்.

இன்றைய பரப்புரையின் போது முதலமைச்சரின் முயற்சியால் இந்திய அளவில் வேலைக்கு செல்லும் பெண்களில் சுமார் 43% பெண்கள் தமிழ்நாட்டு பெண்களாக உள்ளனர். இந்தியாவிலேயே முதலிடத்தில் தமிழ்நாடு உள்ளது. இது பெண்களின் பொருளாதார சுதந்திரம் மற்றும் முன்னேற்றத்தின் மிக முக்கிய குறியீடு ஆகும்.

மேலும் ஸ்டார்ட் அப் தொழில் நிறுவனங்கள் மின்னல் வேகத்தில் உயர்ந்துள்ளன. கடந்த 2018 இல் கடைசி இடத்தில் இருந்த நமது தமிழ்நாடு 2022 லேயே முதலிடத்தை எட்டிப் பிடித்தது. இதில் 50% மான ஸ்டார்ட் அப் கள் பெண்களால் நடத்தப்படுபவை. பெண்களை தொழில் முனைவோர்களாக மாற்றி வருகிறது திராவிட மாடல் அரசு என்பது விளக்கப்பட்டது.

அதேபோல மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 1.34 லட்சம் கோடி கடன் உதவி செய்யப்பட்டுள்ளது. சுமார் 2118 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுவினருக்கான சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக லட்சக்கணக்கான பெண்கள் சுய தொழில் தொடங்கி சாதித்து வருகின்றனர் என்ற தகவல் எல்லாம் விளக்கமாக மக்கள் முன் எடுத்து வைத்து பரப்புரை செய்தனர் ஸ்டாலினின் மகளிர் படையினர்.

பொதுமக்களும் திராவிடமாடல் அரசின் நலத்திட்டங்கள் தங்களின் வாழ்வை எப்படி உயர்த்தி வருகிறது என உணர்ச்சி பொங்க கூறினர்.

இது வெறும் பரப்புரையாக மட்டுமில்லாமல் மகளிர் மனசு விட்டு தங்களின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளும் கலந்துரையாடல் நிகழ்வாகவே பெரும்பாலும் நடைபெற்றது.

## புதுச்சேரி-காரைக்கால் மாநிலம்

# பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் புதுச்சேரி-காரைக்கால் மாநிலத்தில் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.டி.வி. (எ)சங்கர் மறைவெய்திய காரணத்தால், புதுச்சேரி-காரைக்கால் மாநிலம், பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 28 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."" என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

புதுச்சேரி-காரைக்கால் மாநிலம், மாநிலப் பொருளாளர் பொறுப்புக்கு அமுதா ஆர்.ஆறுமுகம் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**புதுச்சேரி – காரைக்கால் மாநிலம், மாநிலப் பொருளாளராக, திரு. அமுதா ஆர்.ஆறுமுகம்,** 19, மரியம் அவென்யூ, திருநள்ளார் ரோடு, காரைக்கால் - 609 602 **அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## மதுரை தெற்கு மாவட்டம்

# மாவட்ட துணைச் செயலாளர் (பொது), பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை தெற்கு மாவட்டத்தில், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதாலும் - பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கொம்பாடி கு.தங்கம் மறைவெய்திய காரணத்தாலும்; தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.முத்துராமன் அவர்கள் செல்லம்பட்டி தெற்கு ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வருவதால், அவர் வகித்துவந்ததலைமைச்செயற்குழுஉறுப்பினர்பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதாலும் - ஏர்போர்ட் ஆர்.பாண்டியன் தான் வகித்துவந்ததலைமைச்செயற்குழுஉறுப்பினர்பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தினாலும்; மதுரை தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (பொது), பொருளாளர், மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் (இருவர்) ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 28 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மதுரை தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கு பி.எஸ்.ஆர்.பாண்டியன், மாவட்டப் பொருளாளர் பொறுப்புக்கு மு.சி.சோ.சி.நிரஞ்சன் மற்றும் இரண்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கு ஆர்.எஸ்.டி.பாண்டியன், வீ. ஜெயராஜ் ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**மதுரை தெற்கு மாவட்டம்,**

**மாவட்ட துணைச் செயலாளராக(பொது)**

**திரு. பி.எஸ்.ஆர்.பாண்டியன்,** 2/196, ஏர்போர்ட் மெயின் ரோடு, பெருங்குடி, மதுரை - 625 022 அவர்களும்;

**மாவட்ட பொருளாளராக திரு. மு.சி.சோ.சி. நிரஞ்சன்.** 51, சோணை மீனா நகர், திருமங்கலம், மதுரை-625 706ம் அவர்களும்;

**தலைமைச் செயற்குழு உறுப்பினராக திரு. ஆர்.எஸ்.டி.பாண்டியன்.** ஆர்எஸ்டி இல்லம், கோபாலபுரம், எழுமலை அஞ்சல், பேரையூர் தாலுக்கா, மதுரை மாவட்டம் அவர்களும்;

**தலைமைச் செயற்குழு உறுப்பினராக திரு. வீ. ஜெயராஜ்,** 1/81, கிழக்கு தெரு, பன்னிக்குண்டு, திருமங்கலம்,

மதுரை-625706 **அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.